திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டமஞ்சி ஊராட்சியிலுள்ள பதினைந்திற்கும் மேற்பட்ட மலைக் கிராம மக்கள் 9 கி.மீ. தூரம் வனப் பகுதியிலே நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டு பாரத் நிர்மாண் பகுதி–1 திட்டத்திலே அந்தச் சாலையை அமைப்பதற்கு 2,67,00,000/– ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விட வனத் துறை அனுமதியளிக்கவில்லை. ஆகவே, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அந்தச் சாலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை அமைப்பதற்கு எந்தத் துறை அனுமதி கோருகின்றதோ, அவர்கள் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து விண்ணப்பித்தால் மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

பால் விற்பனை நிலையம்

***6872—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, டி.வி.எஸ். குடியிருப்புப் பகுதியில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 *ஏப்ரல்* 12]

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, டி.வி.எஸ். காலனி குடியிருப்பு, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கப் பகுதியில் அமைந்துள்ள இக்காலனியிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குறைவாக உள்ள D.A.V. *பள்ளிக்கு அருகில் தானியங்கி பால் வழங்கும் நிலையம் (எண் 114) செயல்பட்டு வருகிறது. அங்கு, தானியங்கி இயந்திரத்தின்மூலம் பால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இங்கு பால் அட்டைகள்மூலம் வாடிக்கையாளர்களுக்கு பாக்கெட் பால், நெய், பால்கோவா, மோர், லஸ்ஸி போன்ற ஆவின் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், 1 கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறைவான பகுதியான டி.வி.எஸ். காலனி குடியிருப்புப் பகுதியில் புதிதாக ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை. எனினும், ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க பொதுமக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் வரப்பெற்றால், ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பால் விற்பனை நிலையம் அமைக்க அனுமதி வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களுடைய குடும்ப குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய அம்பத்தூர் தொகுதியில் உள்ள தானியங்கி பால் விற்பனை நிலையத்தினை, ஏற்கெனவே இருந்த இடத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் மாற்றியிருக்கிறார்கள். அதனை அதே இடத்தில் மாற்றி அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, இரண்டாம் வெண்மைப் புரட்சியை இந்த அரசாங்கம் செயல்படுத்த, மிக முக்கியமான ஒரு அம்சம், தனியார் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையே ஒரு level playing field அமைப்பது. அதற்கு ஆதாரமான விஷயம், Development Commissioner, ஆவின் M.D. இந்த இரண்டு பொறுப்புகளையும் ஒரு அதிகாரியே வகிப்பதால், அந்த level playing field, சமதளம் உருவாகாமல் இருக்கிறது. இதை மாற்றி, இந்த இரு பொறுப்புகளுக்கும் தனித் தனி அதிகாரிகளை அரசு நியமிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள். (குறுக்கீடு) மூலக் கேள்வி ஆவின் பால் விற்பனை நிலையம் அமைப்பது குறித்து. உங்கள் தொகுதியில் அந்த விற்பனை நிலையம் அமைப்பது குறித்து நீங்கள் கேள்விகள் கேட்கலாம். அதை விடுத்து, தொடர்பில்லாமல் கேட்காதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

முற்பகல் 10—35

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது திருப்பத்தூர் தொகுதி, விவசாயம் மற்றும் பால் வளம் மிக்க அந்தப் பகுதியில், பால் உற்பத்தியைப் பெருக்க வசதியாக ஒரு குளிரூட்டும் நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூருக்கு அருகில், நாளொன்றுக்கு ஐம்பதாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஆம்பூரில் செயல்பட்டு வருகின்றது. ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் பெறப்படுகிறது.

2012 ஏப்ரல் 12]

தற்போது, திருப்பத்தூர் மற்றும் அருகிலுள்ள சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பால் ஆம்பூருக்கு அனுப்பப்படுகிறது. இருந்தாலும், பிரதம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள்மூலம் திருப்பத்தூரில் அதிக பால் வரும்பட்சத்தில் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குளிரூட்டும் நிலையம் அமைக்க அனுமதி வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் ஆரம்பித்து விட்ட காரணத்தால் மாண்புமிகு அம்மாவினுடைய அரசில் ஆவின் மூலமாக தரமான மோர், லஸ்ஸி, இனிப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. லஸ்ஸி, மோர் ஆகியவற்றை அரசுப் பேருந்துகளில் விற்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டியராஜன், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் கேட்டது ஆவின் சம்பந்தப்பட்ட கேள்வியாகும். அதாவது Aavin Products. அதற்கு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கும். திடீரென்று நீங்கள் நிருவாகம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்கக்கூடாது. தனியாக இன்னொரு நாள் என்னிடம் வாருங்கள், எப்படிக் கேள்வி கேட்க வேண்டும் என்று உங்களுக்கு வகுப்பு எடுக்கிறேன். மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனத்தின் மூலமாக மோர், தயிர், லஸ்ஸி போன்ற உபபொருட்கள் ஆங்காங்கே மக்கள் கூடுகின்ற இடத்தில் பாலகங்கள் அமைத்து விற்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போக்குவரத்து வாகனங்களில் விற்கப்படுமா என்று ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார். நிருவாகத்தின் மூலமாக ஆய்வு செய்து, அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

[2012 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்கு இடது பக்கம் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து பத்திரிகையாளர்களோடு அவையில் இருந்து கொண்டு உரையாடக்கூடாது. அது மரபு அல்ல. எனவே, இதைக் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

சொந்தக் கட்டடம்

6968*—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் கால்நடை மருந்தகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேதாரண்யம் தொகுதியைச் சேர்ந்த தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஆகிய இரு கால்நடை மருந்தகங்களுக்கும் புதிய கட்டடம் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நபார்டு திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மருத்துவமனைக் கட்டடத்திற்கும் தலா ரூ. 26.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். நான் கேட்டதோ இரண்டு கட்டடங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்*